UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# இளம்பூரணரின் புலப்பாட்டு நெறி (தொல்காப்பியம்)

**பூ. சூரியா,** ஆய்வாளர்
சுழல் எண்: 2325060001, தமிழியல் துறை

**முனைவர் தெ. மேகநாதன்**
பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர், தமிழ்ப் பிரிவு
தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 608 002

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதிய முதல்வர். உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர். தமிழ் மரபிற்கேற்ப உரை எழுதியவர். தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர் என்று சிவஞான முனிவரால் பாராட்டப் பெற்றவர். மூலநூல் ஆசிரியன் கருத்தைப் பிறர் அறிய வேண்டும் எனக் கருதிய ஆர்வலர், தருக்கம் முதலான கலைகளை மிகுதியும் அறியாதவர். நடுநிலையுடன் நின்று பொருள் விளக்கம் தருபவர். இவர் தனது உரையில் பல்வேறு வகையான உத்திகளைக் கையாண்டு உரை விளக்கம் செய்தவர். சொற்பொருள் விளக்கம், வினாவிடை முறை, காரணக் காரியங் காட்டி நிறுவல், தம் மதம் நிறுவ வழக்காற்றை நிறுவல், உவமை கூறி விளக்குதல், தம் கால வழக்கு நோக்கி உரை விளக்கம் கூறல், அனுமானம் வழி புலப்பாடு போன்ற பல்வேறு உத்திகளைக் கையாண்டு மொழியை ஒரு குறியீட்டுக் கருவியாகப் பயன்படுத்தி புலப்பாட்டு நெறி அடிப்படையில் உரை விளக்கம் தந்துள்ளார். இந்நெறியை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

உரன் - அறிவு, கரணம் - வதுவைச் சடங்கு (திருமணம்), சாயல் - மென்மை, வெறுப்பு - செறிவு, மகடூஉ - பெண்பால்.

**முன்னுரை**

புலப்பாட்டு நெறி என்பது எழுத்திலும், பேச்சிலும் படிப்பவர், கேட்பவர் மனதைக் கவரும் வண்ணம் சொற்களையோ அல்லது சொற்களைக் கையாள சில உத்திகளையோ பயன்படுத்தும் முறையே புலப்பாட்டு நெறி எனப்படும். இச்சொல் Rhetor என்ற கிரேக்கச் சொல்லிருந்து உருவானதாகும். இந்நெறிமுறையை தோற்றிவித்தவர் கோரக்ஸ் ஆவார். கி.மு ஐந்தாம் நூற்றாண்டு முதல் கிரேக்கம், உரோமம், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு மாறுதலுக்குட்பட்டு இக்காலம் வரை நடைமுறையில் உள்ளது. இப்புலப்பாட்டு நெறியை இளம்பூரணர் தனது உரையில் எவ்வாறு வெளிப்படுத்தி உள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சொற்களுக்கு பொருள் கூறும் முறை**

இளம்பூரணர் தம் உரையுள் ஆங்காங்கே சுவையான நயமான சொற்பொருள் விளக்கங்களை எழுதிச் செல்கின்றார். தொல்காப்பியர் தந்த சொல்லுக்கு இவர் கூறும் பொருள் விளக்கம் ஆய்வாளர்களுக்கு துணை செய்யும் **“பெருமையும் உரனும் ஆடூஉ மேன”**[1] எனும் நூற்பாவில் பெருமையாவது பழியும் பாவம் அஞ்சுதல், உரன் என்பது அறிவு இவை இரண்டும் ஆண்மகனுக்கு இயல்பு என உரைக்கிறார். தொல்காப்பிய பொருளதிகார 251வது நூற்பாவில் ஆக்கம் என்பது ஒன்றன் பரிணாமங் கண்டு வியத்தல், அது தன்னளவின்றி நன்னிலஞ் சார்பாகத் தோன்றும் மர முதலாயின ஆகிய வழி வியத்தலும், நல்கூர்ந்தான் யாதொன்று மிலாதான் ஆக்கமுற்றானாயின், அதற்கு காரணமுணரா தான் அது கண்டு வியத்தலும், இளையான் வீரங்கண்டு வியத்தலுமாம் என்பார். இலக்கியத்தில் இருந்து எடுத்துக் காட்டும் மேற்கோளை உவமையாக்கிச் சொல்லுக்குப்

பொருளும் கூறுவார். மெய்ப்பாட்டியல் 24வது நூற்பாவில் உள்ள மாணாமை என்ற சொல்லிற்கு விளக்கம் தரும் போது கலித்தொகையிலிருந்து மேற்கோள்காட்டுகிறார். 'மாணமறந்து உள்ள நானில கலித்தே' என்றார் போல் மாணாமை என்பது மிகாமை என உரைப்பினும் அமையும் என்கிறார்.

**வினா விடை முறை**

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்ற நூற்பாவில் செப்பும் வினாவும் வழுவாது வருவதற்கு 'நும் நாடு யாது? என்றால் தமிழ்நாடு என்றல்' என்று விளக்கம் தருகிறார்.

வினாவிற்கு விடையாக உறுவது கூறுதலும் வழுவாகாது என்பதற்கு சாத்தா உறையூர்க்குச் செல்லாயோ எனின் கடமுடையார் வளைப்பர்; பகைவர் எறிவர் என்பது; என்று கீழ்காணும் நூற்பாவிற்கு விளக்கம் தருகிறார்.

**"செப்பே வழீஇயினும் வரை நிலை யின்றே**

**அப்பொருள் புணர்ந்த கிளவி யான"[2]**

**"வினாவும் செப்பே வினாவெதிர் வரினே"[3]**

எனும் நூற்பாவிற்கு உரை கூறும் இளம்பூரணர் 'சாத்தா வுண்ணாயோ?' என்ற வினாவிற்கு உடம்படுதல், மறுத்தல் என்றிரண்டினுள் ஒன்று ஏற்றற்பாலது உண்ணேனோ? என்று வினாவினான் வினா உண்பாலென்னும் பொருள் பட்டமையின் வினாத் தானுஞ் செப்பு ஆயிற்று.

**காரணக் காரியங் காட்டி நிறுவல்**

ஏதேனும் ஒன்றனோடு ஒன்றை தொடர்பு படுத்திக் காணும்போது அதற்கான காரணத்தை முன்வைத்து காரியத்தைப் பின் வைத்து கூறும் முறை காரணக் காரியமுறை ஆகும். இவ்வாறு தொடர்புபடுத்தி காரணத்தோடு இணைத்து விளக்கம் கூறும் முறையை ஒரு உத்திமுறை யாக இளம்பூரணர் கையாண்டுள்ளார்.

**"முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்**

**இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே"[4]**

எனும் நூற்பாவிற்கு விளக்கம் கூறுமிடத்து முதற்பொருள் இரண்டனுள் நிலம் என்பது ஒன்றாகும். நிலம் முதற்பொருள் என்று கூறப் படுகிறது. அதனோடு தொடர்புடைய ஏனைய நீர்; வளி, ஆகாயம், தீ, என்பவனவற்றையும் முதற்பொருளாகவே கொள்ள வேண்டும். எனவே நிலம் என்று கூறியதால் ஏனைய நான்கும் அடங்கும் என்று கூறாமல் நிலத்திற்குக் காரணமாகிய நீரும் நீருக்குக் காரணமாகிய தீயும் தீக்குக் காரணமாகிய காற்றும், காற்றுக்குக் காரணமாகிய ஆகாயமும் இணைந்தது என்று காரணத்தைக் கூறி விளக்குகிறார்.

தொல்காப்பியம் பொருளதிகாரத்தின் 89வது நுற்பாவிற்கு அறம், பொருள், இன்பம் என்பதுதான் வைப்பு முறை ஆயினும் தொல்காப்பியர் இன்பத்தை முன் வைத்து அறத்தைப் பின் வைத்து கூறியிருப்பார். இம்மாற்றத்திற்கான காரணத்தைக் கூறும்போது அறமும் பொருளும் இன்பமும் என்னாது இன்பமும், பொருளும், அறனும் என்றது என்னையெனின் பலவகை உயிர்கட்கும் வரும இன்பம் இருவகைப்படும் அவையாவன போகம் நுகர்தலும், வீடுபெறுதலும் என அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க் கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க் கெய்துவது அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக்காரியத்தை விளக்கிக் கூறுகிறார்.

**உவமைகள் கூறி விளக்கும் நெறி**

புலவர்கள் சொல்ல வந்த கருத்தை நேரிடையாக் கூறாமல் அதற்கு இணையான மற்றொரு பொருளோடோ, கருத்தோடோ ஒப்புமைப்படுத்தி விளங்க வைப்பர். இம்முறையை இளம்பூரணரும் தனதுரையில் கையாண்டுள்ளார்.

**"அவைதாம்**

**குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆய்தம் என்ற**

**முப்பாற்புள்ளியும் எழுத்தோ ரன்ன"[5]**

எனும் நூற்பாவில் சந்தனக்கோல் குறுகினவி டத்தும் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல இகர, உகரங்கள் குறுகிய விடத்தும் அவை உயிர் ஆகற்பாலன என்றும் உவமை கூறி விளக்குகிறார்.

மரபியல் 19ஆம் நூற்பாவில் உள்ள கலத்தல், மயக்கம் ஆகிய சொற்களை விளக்க உவமை கூறுகிறார். கலத்தாலாவது முத்தும் பவளமும், நீலமும், மாணிக்கமும் விரவினாற் போறல்; மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செப்பும் உருக்கி ஒன்றாதல் போறல் என விளக்கம் தருகிறார்.

**தம்கால வழக்கு நோக்கி உரை விளக்கம்**

இளம்பூரணரின் உரையிலிருந்து அக்காலத்து வழக்காறுகள். நாகரிகம், பண்பாடு போன்ற வைகளை அறியமுடிகின்றது. தமது உரையில் நூற்பாவிற்குத் தரும் விளக்கங்களோடு அவர் காலத்தில் நடைபெற்ற வழக்காறுகளையும் செய்திகளையும் இணைத்து விளக்கம் தருவதை அறியமுடிகிறது. 'அச்சுப் போலப் பூப்பூக்கும்! அமலே என்னக் காய் காய்க்கும்' என்ற விடுகதை (பிசி) இவரது உரையில் காணப் படுகிறது.

**"எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே**

**உடம்படுமெய்யின் உருபு கொளல் வரையார்"[6]**

என்ற நூற்பா விளக்கவுரையில் "உரையிற் கோடல்" என்பதனால் உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க. இகர ஈறும் ஈகார ஈறும் ஐகார ஈறும் யகர உடம்படு மெய் கொள்வன எனக் கூறுகிறார்.

**தம்மதம் நிறுவ வழக்காற்றை நிறுவல்**

**"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்**

**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே"[7]**

என்ற நூற்பா விளக்கத்தில், இதனால் சொல்லியது முற்காலத்து காரணம் பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம் என்பதும்; பிற்காலத்து வேளாண்மாந்தர்க்குத் தவிர்த்தது எனவும் கூறியவாறு போலும் என்று கூறுகிறார். சொல்லிய முறையால் சொல்லவும் படுவுமே என்ற நூற்பா அடி விளக்கத்தில் உம்பை எதிர்மறையாகலான் இம்முறையன்றிப் பிறவாய்ப் பட்டால் சொல்லப்படும். காடு, நாடு, மலை, கடல் என்பதைப் பெருவழக்கு, காடுறை நிலம் என்னாது உலகம் எனக் கூறக்காரணம் ஐவகைப்பூதம் ஐந்திற்கும் உய்த்துணர வைத்தவாறு கண்டு கொள்க.

**அனுமானம் வழிப் புலப்பாடு**

**"வாரக் காலத்து வினைச்சொற் கிளவி**

**இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்**

**இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை"[8]**

எனும் நூற்பா விளக்கத்தில் இக்காடு போகிற் கூரை கோட்பாட்டின் எறும்பு முட்டை கொண்டு தெற்றியேறின் மழை பெய்தது எனும் எடுத்துக்காட்டில் அனுமானத்தை வெளிப்படுத்து கிறார்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் 19வது நூற்பா விளக்கத்தில் உலகத்து பொருளெல் லாம் இருவகைப்படும். இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் என, அவற்றுள் இயற்கை உண்டெனில் செயற்கையும் உண்டென்பது அனுமான முறையில் கூறுகிறார்.

**தமிழ் இலக்கியப் புலமை**

இவர் தமிழிலக்கியத்தில் மிகுந்த பயிற்சி உடையவர். பொருளதிகாரம் முழுமைக்கும் நூற்பாக்களுக்குப் பல்வேறு இலக்கியச் சான்று களைக் காட்டிச் செல்வதை அறிய முடிகின்றது.

**"பலவயினானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்**

**அஃறிணை முடிபின செய்யுளுள்ளே"[9]**

எனும் நூற்பா விளக்கத்தில் இளம்பூரணர், பலவிடத்தினானும் உயர்திணையும் அஃறிணை யும் விரவி எண்ணப்படும் பொருள் அஃறிணை முடிபினவாம் செய்யுளகத்து.

**'வடுக ரருவாளர் வான்கரு நாடர்**

**சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும்**

**குறுகா ரறிவுடை யோர்.'**

என வரும். இனிப் பலவயினானும் அஃறிணை முடிபின செய்யுளள்ளே எனவே, சிலவயினான் அஃறிணை விரவாது உயிர் திணையான் எண்ணி அஃறிணை முடிபிற்றா கலும் உண்டும் செய்யுளகத்து என்றவாறாம். அது வருமாறு

**"பாணன் பறையன் துடியன் கடம்பனென்**

**நந்நான் கல்லது குடியுமில்லை"[10]**

எனவரும். என புறானூற்றுப் பாடலை எடுத்துக் காட்டுத் தருகிறார்.

**முடிவுரை**

இளம்பூரணரின் உரை ஒரு நெறியில் இல்லாது பலவாறாக உள்ளது. என் நுதலிற்றோ எனின் என்றுத் தொடங்கிப் பல நூற்பாக்களுக்கு உரை கூறுவார். சிலவற்றிற்கு அந்நெறியைக் கைவிடுவார்.

பல நூற்பாக்களுக்கு கருத்து, பதப்பொருள், காட்டு, விளக்கம் என முறை எழுதிச் செல்வார். முதல் சூத்திரம் நுதலியதைத் தொகுத்துச் சுட்டி, பின்னர் சொற்களையும், சொற்றொடர்களையும் பிரித்துக் காட்டி என்பது என்று தொடங்கி, ஈற்றில் என்றவாறு என முடிப்பது இவரது பெருவழக்கு.

சில சூத்திரங்களுக்கு நுதலியது இன்னெதனக் கூறாதுஞ் செல்வார், சில சூத்திரங்களுக்குப் பொழிப்புரையும் கூறுவார். இத்திறமெல்லாம் இவரது உரையில் நன்கு அறியலாம். சுருங்கக் கூறின் 'தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்' (பொருள் 407) என்னும் தொல்காப்பியர் கூற்று, இளம்பூரணர் உரைத் திறனுக்கு முற்றிலும் பொருந்துவதாகும்.

**அடிக்குறிப்பு**

1. தொல், பொருள், இளம்பூரணம். நூ. 95.
2. தொல், சொல், இளம்பூரணம். நூ. 15.
3. மேலது., நூ. 14.
4. தொல், பொருள், இளம்பூரணம். நூ. 4.
5. தொல், எழுத்து, இளம்பூரணம். நூ. 2.
6. மேலது., நூ. 144.
7. தொல், பொருள், இளம்பூரணம். நூ. 142.
8. தொல், சொல், இளம்பூரணம். நூ. 240.
9. மேலது., நூ. 51.
10. புறநானூறு, பா. 335.

**துணைநூற்பட்டியல்**

1. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், இளம்பூரணம், பதிப்பாசிரியர் கு.சுந்தரமூர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1979.
2. தொல்காப்பியம், சொல்லதிகாரம், இளம்பூரணம், கழகப் பதிப்பு, சென்னை, 1958.
3. தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம், கழகப் பதிப்பு, திருநெல்வேலி, 1953.
4. புலப்பாட்டு நெறி, டாக்டர் பி. தெட்சிணாமூர்த்தி, வளநருள் வெளியீடு, சென்னை – 87, 1984.
5. மேலைநாட்டுப் புலப்பாட்டு நெறி, டாக்டர் நெல்லை. க. சுப்பிரமணியன், உமா அச்சகம், நெல்லை, 1987.
6. புறனானூறு, ஔ. சு. துரைசாமிப்பிள்ளை, கழகப்பதிப்பு, சென்னை-1968